செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 21.12.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; நவம்பர் 2016

### தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர. சத்தரசிங்ஹ அவர்கள், 2016 நவம்பர் இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம் 2016 ஒக்ரோபர் இல் இருந்த 5.0% இலிருந்து 4.1% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவித்தார். பணவீக்க வீழ்ச்சிக்கான காரணம் ஒப்பீட்டளவில் நவம்பர் 2015 இல் விலை மட்டங்கள் உயர்வாகக் காணப்பட்டமையாகும். 2016 நவம்பர் இல், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு முறையே 0.7%, 3.4% ஆக காணப்பட்டன.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 நவம்பர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 நவம்பர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 116.6 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (ஒக்ரோபர்) சுட்டெண்ணான 114.7 உடன் ஒப்பிடுகையில் 1.9 சுட்டெண் புள்ளி அல்லது 1.7 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.50% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 1.17% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

ஒக்ரோபர் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 நவம்பர் இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.50% அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த மாதம் (ஒக்ரோபர்) உடன் ஒப்பிடும்போது அரிசி, தேங்காய், மரக்கறி, உருளைக்கிழங்கு, தேசிக்காய், பெரிய வெங்காயம், தேயிலை, மைசூர் பருப்பு, தேங்காய் எண்ணெய், நெத்தலிக் கருவாடு, சின்ன வெங்காயம் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே 2016 நவம்பரில் உணவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்புக்குக் காரணமாகும். எனினும் உடன் மீன், பப்பாசி, கோழி இறைச்சி, மாம்பழம், முட்டை, அன்னாசி, பச்சை மிளகாய், என்பவற்றின் விலைகளில் வீழ்ச்சி காணப்படுகிறது.

ஒக்ரோபர் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 நவம்பர் இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 1.17% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'சுகாதாரம்', 'தொடர்பாடல்', 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம்' 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு', 'உடையும் காலணியும்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பினாலாகும். அத்துடன் 'போக்குவரத்து' மற்றும் 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்' பிரிவின் செலவுப் பெறுமதியில் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது 'கல்வி' பிரிவுச் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. 'சுகாதாரம்', 'தொடர்பாடல்', 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து' என்பவற்றிலுள்ள செலவுப் பெறுமதி அதிகரிப்பு, 2016 நவம்பர் 1ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் புதிய பெறுமதிசேர் வரி (VAT) அமுலாக்கலினால் ஏற்பட்டதாகும்.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2015** | ஒக்ரோபர் | 109.2 | 0.7 | 3.0 |
| | நவம்பர் | 112.0 | 2.6 | 4.8 |
| | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஒகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
தொ. இல.: 011-2147001 / 011-2147020